1995 மே 3]

முற்பகல் 11–50

(ஆ) உறுப்பினர் கொடுத்துள்ள அறிவிக்கை குறித்து

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. தம்புசாமி, நாகப்பட்டினம் -காயிதே மில்லத் மாவட்ட ஆட்சித் தலைவரிடம் மனு கொடுக்கச் சென்றபோது, விவசாயிகள் மீது காவல் துறையினர் தாக்கியது குறித்த ஒரு பிரச்சினையை கொடுத்திருக்கிறீர்கள். அதுபற்றி நான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்குத் தெரிவித்து, அவர்கள் பதிலுரையை வாங்கிய பிறகு எடுத்துக் கொள்கிறேன். கொடுத்தது தாமதம், அதனால் எடுத்துக்கொள்ள முடியவில்லை.

4. உரிமைப் பிரச்சினை

காங்கிரஸ் கட்சியின் சில உறுப்பினர்கள் அவையில் நடந்துகொண்ட முறை குறித்து (பேரவைப் பணிகளினின்றும் அவர்கள் எஞ்சிய கூட்ட நாட்களுக்கு தற்காலிகமாக நீக்கி வைக்கப்பெறுதல் உள்பட)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இன்றைக்கு திட்டமிட்டு அவையில் கலகம் செய்ய வேண்டுமென்கிற நோக்கோடு நடந்துகொண்ட உறுப்பினர்களை நான் பேரவையைவிட்டு வெளியேற்றியிருக்கிறேன். அவர்களில், திரு. தே. குமாரதாஸ், திரு. சி. ஞானசேகரன், திரு. சா. பன்னீர்செல்வம், திரு. ப. ரங்கநாதன் ஆகியோர் இன்று இரண்டாவது முறையும் அத்துமீறி நடந்து கொண்டமைக்காகவும், பேரவையின் இதர அலுவல்கள் அத்துணையுமையம் பாதிக்கின்ற அளவுக்கு, குந்தகம் ஏற்படுகிற வகையில் தொடர்ந்து இரண்டாவது முறையும் இன்றைக்கு நடந்த காரணத்தால், அவர்கள் பேரவையின், கூட்டத் தொடரின் எஞ்சிய நாட்களுக்கும் பேரவைக்கு வரலாகாது என்று அறிவிக்கப்படுகிறார்கள். இதில், திரு. குமாரதாஸ் பிளாக் 4-லே இருக்கக்கூடிய ஆறுமுகம் மைக்கை உடைத்ததும், திண்டிவனம் பன்னீர்செல்வம், ஞானசேகரன், ஆகியோர் தங்களுடைய மைக்குகளை உடைத்ததும், உறுப்பினர் ரமேஷ் மீது தாக்குதல் நடத்தியதும் மற்றும் ரங்கநாதன், உறுப்பினர் கோவை செல்வராஜ் இருக்கையிலேயிருந்த மைக்கை உடைத்ததும்*, இழிவான வார்த்தையை, நாகூசுகிற வார்த்தைகளை இங்கே உச்சரித்தமையும், அவையின் உரிமை மீறிய செயல்களாகப் பார்த்த பார்வையிலேயே, எடுத்த எடுப்பிலேயே தெரிகிற

---

*மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க மாற்றப் பெற்றது.